பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 17 சனிக்கிழமை 01.01.2022 கதிர் 285

## 10 ஆயிரம் பஸ் ஊழியர்கள் சேவையிலிருந்து விலகல்!

இலங்கையில் பத்தாயிரம் பஸ் சேவையாளர்கள், தற்போது சேவையிலிருந்து விலகியுள்ளனர் என்று அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது 50 சதவீதமளவில், நாடளாவிய ரீதியில் பஸ்கள் சேவையில் ஈடுபடுகின் ☞2

## நாடு திரும்பினார் பஸில் ஓரிரு நாள்களில் அதிரடி

### 6 அமைச்சுக்கள் கைம்மாறுமா?



முக்கிய ஆறு அமைச்சுகளின் விடயதானங்கள் கைம்மாற்றப்படவுள்ளன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் அமைச்சரவை விரைவில் மறுசீரமைக்கப்படவுள்ளது.

அமெரிக்கா சென்றிருந்த நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இன்று நாடு திரும்பினார். எனவே, இன்னும் ஓரிரு நாள்களில் இந்த மாற்றம் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்போதே முக்கிய ஆறு அமைச்சர்களின் விடயதானங்கள் கைம்மாற்றப்படவுள்ளன. ☞2

## மீண்டும் எகிறியது சிமெந்தின் விலை

சீமெந்துப் பொதியின் விலையை இன்று முதல் அதிகரிக்க உள்நாட்டு சிமெந்து நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

50 கிலோ சிமெந்துப் பொதியின் விலையை 100 ரூபாவால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சிமெந்துப் பொதி ஒன்றின் புதிய விலை 1,375 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ☞2



வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள் அனைவருக்கும் காலைக் கதிரின் இனிய ஆங்கில புதுவருட நல் வாழ்த்துக்கள்.

2022

நிர்வாக இயக்குநர், மற்றும் பணியாளர்கள்
Green Media House pvt ltd
பசுமை ஊடக இல்லம்

தமிழ் பேசும் தரப்புகளின் ஒருமித்த நிலைப்பாட்டை விவரிக்கும்

## புதிய ஆவண நகல் இன்று தயாரானது!

### தலைவர்களின் முடிவுக்குக் காத்திருப்பு

கொழும்பு, ஜனவரி 01

வடக்கு – கிழக்குத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய தமிழ் பேசும் தரப்புக்களின் ஒருமித்த நிலைப்பாட்டை – பொதுவான அபிலாஷைகளை – பிரதிபலிக்கும் பொது ஆவணத்தைத் தயாரிக்கும் முயற்சியில் புதிய நகல் ஒன்று இன்றைய கூட்டத்தில் இறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்த் தரப்புக் கட்சித் தலைவர்களின் பரிசீலனைக்கு அது வழங்கப்பட்ட பின்னர் தீர்மானம் எடுக்கப்படும். ☞2

## வட., கிழக்கு இணைந்தால் மீண்டும் இரத்த ஆறு ஓடும்

### இப்படிச் சொல்கின்றார் தினேஷ்



வடக்கு, கிழக்கு மீள இணைந்தால் மீண்டும் இரத்த ஆறு ஓடும் என்று அமைச்சர் தினேஷ் குணவர்தன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தைச் சுட்டிக்காட்டி தமிழ்க் கட்சிகள், இந்தியப் பிரதமருக்கு ஆவணம் அனுப்பு ☞2

## யாழில் கடை உடைத்து 10 மூடை அரிசி திருட்டு

(இ.கலையமுதன்)

யாழ். அச்சுவேலி மேற்கில் வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு 10 மூடைகள் குத்தரிசி களவாடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில், அச்சுவேலி மேற்கில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றின் அருகில் உள்ள வர்த்தக ☞2

## அடுத்த மூன்று வாரங்களும் மிகவும் அவதானமிக்கவை!

### வைத்திய நிபுணர் சமித்த கினிகே எச்சரிக்கை



அடுத்து வரும் மூன்று வாரங்களும் அவதானம்மிக்க வாரங்கள் என்பதால் பொது மக்கள் பொதுச் சுகாதார விதிமுறைகளை முறையாகப் பின்பற்றி நடப்பது அவசியம் என்று தொற்றுநோய் பிரிவின் வைத்திய நிபுணர் சமித்த கினிகே தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:- ☞2

## கொடுங்கோல் ஆட்சி நடத்தும் அரசை வீட்டுக்கு அனுப்புவோம்

### சூளுரைக்கின்றார் சஜித்



கொடுங்கோல் ஆட்சி நடத்தும் ராஜபக்ஷ குடும்ப அரசை வீட்டுக்கு விரட்டியடிப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த அரசின் சர்வாதிகார ஆட்சியால் நாட்டு மக்கள் இன்று வறுமையின் பிடியில் சிக்கித் தவிர்க்கின்றனர். ☞2

## யாழ். சிறையிலுள்ள இந்திய மீனவர்களை நேரில் சந்தித்தார் கடற்றொழில் அமைச்சர்

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களைக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்று சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டார். ☞2



## ஓட்டோ விபத்து: 2 பேர் படுகாயம்

(வவுனியா நிருபர்)

மடுப் பகுதியில் ஓட்டோ குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மன்னார் - மதவாச்சி வீதியூடாக ஓட்டோ சென்றுகொண்டிருந்தபோது மடுப் பகுதியை அண்மித்த நிலையில் ஓட்டோவின் எதிர்த்திசையில் வந்த டிப்பர் வாகனம் ஓட்டோவை முந்திச் செல்ல முற்பட்டது. இதன்போது ஓட்டோ சாரதியின் ☞2

## 10 ஆயிரம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
றன என்று அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதனால்பஸ்சேவையாளர்களுக்குப் பாரிய பற்றாக்குறை நிலவுகின்றது.

தற்போது வரையில் சுமார் 10 ஆயிரம் சேவையாளர்கள் சேவையிலிருந்து விலகி, வேறு தொழில்களை நாடியுள்ளனர்.

இதன் காரணமாக, தனியார் பஸ் தொழில்துறை பாரிய பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளது என்றும் அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன மேலும் கூறியுள்ளார்.

## நாடு திரும்பினார் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதேவேளை, சில இராஜாங்க அமைச்சுக்களும் மாறவுள்ளன என்று தெரிய வருகின்றது.

## மீண்டும் எகிறியது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனினும். தற்போது இறக்குமதி செய்யப்படும் சிமெந்துப் பொதியின் விலையானது, உள்ளூர் சீமெந்துப் பொதியின் விலையை விடவும் 100 ரூபா அதிகமாகும்.

அதன்படி இறக்குமதி செய்யப்படும் சீமெந்துப் பொதியின் விலை 1,475 ரூபாவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் கடை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலையத்திலேயே நேற்றுமுன்தினம் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெறுள்ளது.

இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வட, கிழக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வதால் வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒருபோதும் மீண்டும் இணைக்க முடியாது. இதற்கு முஸ்லிம் மக்கள் அனுமதி வழங்கமாட்டார்கள்.

வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகமோ அல்லது முஸ்லிம்களின் தாயகமோ அல்ல. இரு மாகாணங்களும் இலங்கை எனும் நாட்டுக்குள்ளேயே அமைந்துள்ளன. எனவே, மாகாணங்களைப் பிரித்து எந்த இனத்தவர்களும் சொந்தம் கொண்டாட முடியாது. அனைவரும் ஒரே நாட்டுப் பிள்ளைகள். சகலரும் இலங்கையர்கள் என்ற நாமத்துடன் இங்கு வாழ வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அன்று இணைந்திருந்தபடியால்தான் இனக்கலவரம் வெடிக்க ஆரம்பித்தது. வன்முறைகள் தாண்டமாடத் தொடங்கின.

இந்த இரு மாகாணங்களையும் முன்வைத்துத்தான் 'தமிழீழம்' என்ற கனவுடன் விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஏந்திப் போராடினர். இதனால் நாடெங்கும் இரத்த ஆறு ஓடியது. வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்டார்கள்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற இந்தத் துன்பியல் நிகழ்வுகளைத் தமிழ்க் கட்சிகள் கவனத்தில்கொண்டு செயற்பட வேண்டும் - என்றார்.

## கொடுங்கோல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எத்தனையோ வலிகளையும், வேதனைகளையும், கஷ்டங்களையும் தாங்கிக்கொண்டு புதிய ஆண்டில் மக்கள் காலடி எடுத்து வைக்கின்றனர்.

2022ஆம் ஆண்டு கொடுங்கோல் ஆட்சி நடத்தும் ராஜபக்ஷ குடும்ப அரசுக்கு முடிவு கட்டும் ஆண்டாக அமைய வேண்டும்.

இந்த அரசு ஆட்சியில் நீடித்தால் பட்டினியால் மக்கள் நாள்தோறும் செத்துமடியும் நிலைமை ஏற்படும். எனவே, இந்த அரசை இந்தப் புதிய ஆண்டின் ஆரம்பத்திலேயே வீட்டுக்கு விரட்டியடிக்க அனைவரும் ஓரணியில் திரள வேண்டும் - என்றார்.

## யாழ். சிறையிலுள்ள ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று மதியம் ஒரு மணியளவில் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு வந்த அமைச்சர் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களைப் பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடினார்.

அவருடைய விஜயத்தின்பொது யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனப் பிரதிநிதிகளும் இணைந்திருந்தனர்.

இதன்போது புதுவருடத்தை முன்னிட்டு இந்திய மீனவர்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் அமைச்சரால் வழங்கிவைக்கப்பட்டன.

## புதிய ஆவண ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனின் இல்லத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் நண்பகல் 11.30 மணி முதல் 1.30 மணி வரை புதிய நகல் ஆவணம் தயாரிக்கும் முயற்சியில் தலைவர்கள் ஈடுபட்டனர்.

இந்த முயற்சியில் எம்.ஏ.சுமந்திரன், முஸ்லிம் காங்கிரஸின் ரவூப் ஹக்கீம் மற்றும் நிஸாம் காரியப்பர், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ரெலோவின் பேச்சாளரும் இந்த முயற்சியின் இணைப்பாளருமான சுரேந்திரன் குருசாமி ஆகியோர் பங்குபற்றினர். புதிய ஆவண நகல் தயாரிப்புக்காக மனோ கணேசன் அனுப்பி வைத்த குறிப்பும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த ஆவணத்தில் -

✦ 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதற்கு அப்பாலும் செல்வோம் என 1987 முதல் இலங்கை, இந்தியத் தலைவர்கள் வழங்கிய உறுதிமொழிகள் நினைவூட்டப்பட்டுள்ளன.

✦ 13ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்டு, பின் கைவாங்கப்பட்ட, நடைமுறைப்படுத்தப்படாத அதிகாரப் பகிர்வு விடயங்களை நடைமுறைப்படுத்துவது இந்திய, இலங்கை அரசுகளின் கடப்பாடு என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

✦ சமஷ்டி அடிப்படையிலான தீர்வே இறுதி இலக்காக அமைய வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சுமார் மூன்று பக்கங்களைக் கொண்ட இந்த நகல் ஆவணத்தின் பிரதிகள் அனைத்துத் தமிழர் தரப்புக் கட்சிகளின் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. அவர்களின் பிரதிபலிப்பை கவனத்தில் எடுத்து ஆவணம் இறுதி செய்யப்படும் எனத் தெரிகின்றது.

இன்றைய கூட்டத்துக்கு மனோ கணேசன் வராத நிலையில் இந்த ஆவணம் தொடர்பில் அவரின் அவதானிப்பு முக்கியமாக எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆவணத்தின் பிரதியைத் தம்முடன் எடுத்துச் சென்ற ரவூப் ஹக்கீம் எம்.பி., தமது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களுடன் விரிவாக உரையாடிய பின்னர் தமது பக்கக் கருத்துக்களைத் தெரிவிப்பார் எனவும் கூறப்பட்டது. (உ)

## அடுத்த மூன்று .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொதுமக்கள் பொதுச் சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்டால் நாடு மீண்டும் அபாயகரமான நிலைமைக்குச் செல்லும்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் திருப்தியளிக்கின்றன. எனினும், இந்த நிலைமையைத் தொடர்ந்து பேணுவதற்கு, தடுப்பூசி செலுத்துவதைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

கொரோனாத் தடுப்புக்கான மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் மக்களின் ஆர்வம் குறைவாகவே உள்ளது. குறிப்பாக இளைஞர், யுவதிகள் ஆர்வம் செலுத்தவில்லை.

இது ஆபத்தான நிலை. முதல் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்கள் மூன்று மாதங்களின் பின்னர் மூன்றாவது தடுப்பூசியைச் செலுத்திக்கொள்ள வேண்டும். மக்கள் மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம் என்று தொற்று நோய் பிரிவு கோரிக்கை விடுக்கின்றது.

தற்போதைய நிலையிலும்கூட கொரோனா வைரஸ் பரவும் அபாயம் நீங்கவில்லை. எனவே, பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் பின்பற்றுவது அவசியமாகும் - என்றார்.

# வருட இறுதி விபத்துக்களில் பறிபோனது ஐவரின் உயிர்கள்

நாட்டின் பல பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்துக்களில் ஐவர் உயிரிழந்துள்ளனர். சிலாபம், கரடியனாறு, பேராதனை, கடுகன்னாவ மற்றும் பியகம ஆகிய இடங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களிலேயே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு - சிலாபம் பிரதான வீதியின் மெரவல பகுதியில் சிலாபம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் பலத்த காயமடைந்த சைக்கிளில் சென்ற நபர் சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

மெரவல பிரதேசத்தை சேர்ந்த 75 வயதுடையவ ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு - செங்கலடி வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கரடியனாறு பகுதியைச் சேர்ந்த 19 வயதுடையவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை பேராதனை - கட்டுகஸ்தோட்டை வீதியில் கோரக்கதெனிய சந்திக்கு அருகில் பேராதனையிலிருந்து கட்டுகஸ்தோட்டை நோக்கி பயணித்த டிப்பர் வாகனம் அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கடுகன்னாவை பிரதேசத்தை சேர்ந்த 21 வயதுடைய யுவதி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, கொழும்பில் இருந்து கண்டி நோக்கி பயணித்த லொறி ஒன்று கண்டி ஊராபொல பிரதேசத்தில் பாதசாரி ஒருவர் மீது மோதி விபத்துக்குள்ளானது.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த 60 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

லொறியின் சாரதியின் கவனக்குறைவு காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பியகம - பண்டாரவத்தை மல்வான வீதியில் யபரலுவ பிரதேசத்தில் பண்டாரவத்தை நோக்கிச் சென்ற சிறிய லொறியுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் அநுராதபுரத்தைச் சேர்ந்த 21 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## ஓட்டோ விபத்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டுக் கீழிறங்கி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் ஓட்டோவின் சாரதி உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த போக்குவரத்துப் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (100)



விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்–
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தடுப்பூசி பெறத் தவறாதீர்கள்!

கடந்த இரண்டு ஆண்டுகளாக நமது நாடு உட்பட முழு உலகையுமே பெரும் நெருக்கடியில் ஆழ்த்தியிருக்கும் கொவிட் தொற்று புதுப்புது வடிவங்கள் எடுத்து மனித குலத்துக்கே பெரும் சவால்விடும் நுண்ணுயிரியாக மாறி யிருக்கின்றது.

ஒரு வகை கொவிட் வைரஸுக்கு எதிரான உரிய தடுப்பூசிகளை நீண்டகால ஆராய்ச்சி, சிரத்தை, நிதி மற்றும் நேரச் செலவுகளுடன், பகீரதப் பிரயத்தனப்பட்டு, விஞ்ஞானிகள் கண்டுபிடித்து, அவற்றைப் பெரும் எடுப்பில் தயாரித்து, உலக மாந்தர்களுக்கு எல்லாம் வழங்கி, மூச்சு விடுவதற்குள் அந்தத் தடுப்பூசிகளுக்கு 'டிமிக்கி' கொடுக்கும் புது வடிவத்தை – விகாரத்தை – அந்த நுண்ணுயிரி எடுத்துக் கொண்டு மீண்டும் தன் கைவரிசையை காட்டத் தொடங்கி விடுகின்றது.

சூரசம்ஹாரத்தின் போது சூரனின் தலையைக் கொய்யக் கொய்ய, புதிய தலையுடன் சூரன் உருவெடுப்பது போல கொரோனா சூரனும் தன் கைவரிசையை புதுப்புது வடிவங்களில் காட்டி வருகின்றான்.

அந்த வரிசையில் கொவிட் தொற்றின் புது வடிவம்தான் ஒமிக்ரோன். இது வரை பரவிய கொவிட் வைரஸ் ரகங்களில் வேகமாகவும் வீரியமாகவும் பரவித் தொற்றும் திறன் கொண்டது இந்தப் புதிய வடிவம். எனினும் உயிர்ப்பலி எடுப்பில் அதன் வீரியம் சற்றுக் குறைவாக இருப்பதுதான் ஆறுதல் தரும் ஒரு விடயம்.

இந்த ஒமிக்ரோன் தொற்றுப் பரவல் இலங்கையிலும் தாராளமாகத் தொடங்கிவிட்டது என்பதை சுகாதார அமைச்சு ஒப்புக் கொண்டுள்ளது.

ஆரம்பத்தில் இத்தொற்றுக்குள்ளான ஒரு சிலரே நாட்டில் அடையாளம் காணப்பட்டனர்.

ஆனால் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வு கூடத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி, இத்தொற்றுக்கு உள்ளான 41பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான அனைவரினதும் மாதிரிகள் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக ஆய்வு கூடத்துக்கு அனுப்பப்படுவதில்லை. அனுப்பப்பட்ட மாதிரிகளில் 41பேருக்கு ஒமிக்ரோன் தொற்று ஏற்பட்டிருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது.

அந்த வகையில் நோக்கினால் ஒமிக்ரோன் தொற்றுடன் வைரஸ் காவிகள் மேலும் பல நூறு பேர் நாட்டில் இருக்க முடியும் எனக் கருதப்படுகின்றது.

ஆகவே, கொவிட் தொற்றுச் சவாலின் மற்றொரு இக்கட்டை – நெருக்கடியை – எதிர்கொண்டு சமாளிக்க வேண்டிய சிக்கல் வேளை நாட்டுக்கு வந்து விட்டது என்பதுதான் அர்த்தம்.

ஏற்கனவே கொவிட் தொற்றுக்கு எதிரான தடுப்பூசிகள் மூலம் அந்த நோய் எதிர்ப்புச் சக்தியை எவ்வளவு காலத்துக்கு பெற்றிருக்க முடியும் என்ற விடயத்தில் தீர்க்கமான முடிவு இல்லை. இரண்டு டோஸ் தடுப்பூசியைப் பெற்றாலும் அதனால் கிட்டும் எதிர்ப்பு சக்தி அல்லது நீர்ப்பீடனம் ஆறு மாதங்கள் முதல் ஒரு வருடம் வரைதான் என்று கூறப்படுகின்றது.

போதாக்குறைக்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட தடுப்பூசிகளுக்கு இந்தப் புதிய ஒமிக்ரோன் கண்ணாமூச்சி காட்டுகின்றது என்கின்றனர் விஞ்ஞானிகள்.

இரண்டு தடுப்பூசிகள் பெற்றவர்கள் மூன்றாவது "பூஸ்டர்" செயலூக்கி. தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டால் ஒமிக்ரோனுடன் எதிர்த்துப் போரிடும் வலு அதிரிக்கும் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஆகவே, மூன்றாவது செயலூக்கி தடுப்பூசியையும் காலம் தாழ்த்தாது பெறுவதன் மூலம் ஒமிக்ரோனுடன் போராட ஒவ்வொருவரும் தயாராக வேண்டும்.

# மஹிந்த ஓய்வு பெற நினைத்தாலும் மக்கள் அதனை அனுமதிக்கார்கள்!

## திலும் அமுனுகம நம்பிக்கை



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து ஓய்வுபெற முயற்சித்தாலும் நாட்டு மக்கள் அதனை அனுமதிக்க மாட்டார்கள் என பயணிகள் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுக தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து ஓய்வு பெற்று, பிரதமர் பதவியை பஸில் ராஜபக்ஷவுக்கு வழங்கவுள்ளதாக நாட்டில் தகவலொன்று பரவி வருகிறது.

இந்த விடயம் தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் திலும் அமுனுகமவிடம் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த அவர் –

மஹிந்த ராஜபக்ஷ ஒரு முறை அரசியலிலிருந்து ஓய்வுபெற முயற்சித்தார். நாட்டு மக்கள் அதற்கு அனுமதி வழங்கவில்லை. மீண்டும் அவர் ஓய்வுபெற முயற்சித்தாலும் அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மக்கள் அதனை அனுமதிக்க மாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் இதுதான் உண்மையான கதை என்றும் அவர் விரும்பினாலும் அதற்கான சந்தர்ப்பம் அவருக்குக் கிடைக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, மஹிந்த ராஜபக்ஷ உயிருடன் இருக்கும் வரை அரசியலிலிருந்து ஓய்வு பெற மக்கள் அனுமதி வழங்க மாட்டார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.



# 1,500 கோடி ரூபா பெறுமதியிலான போதைப் பொருள்கள் கைப்பற்றல்

2021 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது 1500 கோடி ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியுடைய போதைப் பொருள்களை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய புலனாய்வுப் பிரிவுகளுடன் இணைந்து இலங்கை கடற்பரப்பிலும் சர்வதேச கடற்பரப்பிலும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த போதைப் பொருள் கைப்பற்றப்பட்டன எனக் கடற்படை தெரிவித்துள்ளது. இந்த நடவடிக்கையின் போது, 1,268 கிலோகிராம் அதிகமான ஹெரோயினுடன் வெளிநாட்டவர்கள் உட்பட 141 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 7 ஆயிரத்து 95 கிலோகிராம் கேரள கஞ்சா, 158 கிலோகிராம் ஐஸ் மற்றும் 88 கிலோகிராம் ஹஷிஸ் உடன் 327 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும் கடற்படை தெரிவித்துள்ளது.

# ஊதியத்துடன் கூடிய இலவச கற்கை நெறி

## யாழில் யாரும் விண்ணப்பிக்கலாம்

இலங்கையின் மிகவும் பிரபல்யமான சுற்றுலா மையமான யாழ்– இயக்கச்சியில் அமைந்துள்ள றீ(ச்)ா ஒருங்கிணைந்த பண்ணையில் தொழில் வாய்ப்புடன் கூடிய ஹோட்டல் முகாமைத்துவ கற்கை நெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உணவு மற்றும் பாண முகாமைத்துவம்
வரவேற்பறை முகாமைத்துவம்
சர்வதேச சமையற்கலை

போன்ற துறைகளில் முகாமைத்துவ கற்கைகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கற்கை நெறிகள் முழுவதும் இலவசமாகவே வழங்கப்பட இருப்பதுடன், பயிற்சியின் போதே கவர்ச்சிகரமான சம்பளமும் வழங்கப்படும்.

அத்தோடு, பயிற்சி நெறிகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களுக்கு இலவச சீருடை, உணவு போன்றனவற்றுடன் சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழும் வழங்கப்படும்.

கற்கைநெறியில் திறமையை வெளிப்படுத்துபவர்களுக்கு உடனடியான வேலைவாய்ப்பும் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள் நிர்வாகத்தினர்.

தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இல:
077 4922888
077 9908575
விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டிய கடைசி தினம்: 05.01.2022



# புத்தாண்டு பிறந்தது: கட்டுப்பாடுகளுடன் உலக மக்கள் கொண்டாட்டம்!

கடுமையான கட்டுப்பாடுகளுடன் பிறந்திருக்கும் புத்தாண்டை உலக மக்கள்உற்சாகமாககொண்டாடிவருகின்றனர்.

நியூஸிலாந்தில் இலங்கை நேரப்படி நேற்று மாலையிலேயே புத்தாண்டு பிறந்துள்ளது. புத்தாண்டை முதலில் வரவேற்ற நியூஸிலாந்தின் ஒக்லாந்து நகரில், உள்ளூர் நேரப்படி டிசெம்பர் 31 நள்ளிரவு 12 மணி ஆனதும் லேசர் விளக்குகள் ஒளிர, வாண வேடிக்கைக ளுடன் கொண்டாட்டம் களைகட்டியது. நகரமேவண்ணமயமாககாட்சி யளித்தது.

இதைத் தொடர்ந்து அவுஸ்ரேலியா 2022ஆம் ஆண்டை வரவேற்றது. அங்குள்ள சிட்னி துறைமுகப்பகுதியில் வானத்தை வண்ணயமாக்கும் வகையில் வாண வேடிக்கை நிகழ்ச்சி நடைபெற்றது. இதை ஏராளமானோர் கண்டு ரசித்தனர்.

சிட்னியில் நிகழ்த்தப்பட்ட உலகப் புகழ்பெற்ற வாணவேடிக்கை விண்ணில் கண்கவர் வண்ணங்களில் ஜொலித்தன.

லண்டன் மற்றும் பரிஸ் உள்ளிட்ட முக்கியநகரங்கள், இம்முறைதங்களுடைய பாரம்பரிய வழக்கமான வாணவேடிக்கை நிகழ்ச்சிகளை ரத்து செய்துள்ளன அல்லது குறைத்துள்ளன.

கொரோனா, ஒமிக்ரோன்திரிபுபரவலை கவனத்தில் கொண்டு பல நாடுகள் மக்கள் நடமாட்ட கட்டுப்பாடுகளை மீண்டும் அமல்படுத்தியுள்ளன.



## வான வேடிக்கைகளுடன் நியூஸிலாந்தில் புத்தாண்டு

நியூஸிலாந்தின் ஒக்லாந்தில் பிரமாண்ட வான வேடிக்கையுடன் புத்தாண்டு பிறந்துள்ளது.

நியூஸிலாந்து மக்கள் பிறந்திருக்கும் புத்தாண்டை மிக மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது மக்கள், இனிப்புகளை பறிமாறியும், வாழ்த்துக்களை தெரிவித்தும் புத்தாண்டை வரவேற்றனர்.

# தடைகள் உறவுமுறையை கடுமையாக பாதிக்கும்

## பைடனிடம் புடின் தெரிவிப்பு!



உக்ரைன் விவகாரத்தில், அமெரிக்கா ரஷ்யா மீது புதிய தடைகளை விதித்தால் அது இருநாடுகளுக்கு இடையில் உள்ள உறவுமுறை கடுமையாக பாதிக்கப்படும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை எச்சரித்துள்ளார்.

இருநாட்டு ஜனாதிபதிகளுக்கும் இடையில் நேற்று கிட்டத்தட்ட சுமார் 50 நிமிடங்களுக்கு மேல் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின் போது, புடின் இதனைத் தெரிவித்தார்.

பிற்பகல் 3.35 மணிக்குத் தொடங்கி 4.25 மணி வரை இந்தப் பேச்சு நீடித்ததாக வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைன் எல்லையில் ரஷ்யா படைகளைக் குவித்ததால் அங்கு நிலவும் பதற்றமான சூழல் குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர். பதற்றத்தைத் தணிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜோபைடன் வலியுறுத்தியுள்ளார்.

புத்தாண்டில் ரஷ்யா அமெரிக்கா இடையே அரச முறை பேச்சுகள் தொடங்க உள்ளதைக் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர் என வெள்ளை மாளிகை தெரி வித்துள்ளது. உக்ரைன் பதற்றத்தைத் தணித்த பிறகுதான் இருதரப்பிலும் சுமுகமான பேச்சு களுக்கான சூழல் உருவாகும் என்றும் ஜோ பைடன் வலியுறுத்தி யுள்ளார். இரு தலைவர்களும் விரைவில் காணொளி வாயிலாக கலந்து பேச இருக்கின்றனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது

அதே அழைப்பில் ரஷ்யா, உக்ரைன் மீது படையெடுத்தால், அமெரிக்காவும், அதன் கூட்டாளி நாடுகளும் தக்க பதிலடி கொடுக்கும் ஜோ பைடன் எனகூறியுள்ளார்.

உக்ரைனின் கிழக்கு எல்லையில் சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான ரஷ்ய துருப்புகள் நிலை நிறுத்தப்பட்டுள்ளன என உக்ரைன் அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஆனால் ரஷ்ய தரப்போ தன் நாட்டு எல்லைக்கும் தன் துருப்புகளை எங்கு வேண்டுமானாலும் நகர்த்திக் கொள்ள தங்களுக்கு சுதந்திரமிருக்கிறது என கூறுகின்றது, மேலும் உக்ரைன் மீது படையெடுக்க எந்தவித திட்டமும் இல்லை என்றும் மறுத்துவருகிறது.

உலகின் இரு முக்கிய நாட்டு ஜனாதிபதிகள் பேச்சு நடத்துவது இந்த மாதத்தில் இது இரண்டாவது முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# தாய்வான் மீண்டும் இணைவதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை!

## சீனா இறுமாப்பு

சீனத் தாயகத்துடன் மீண்டும் இணைவதைத் தவிர தாய்வான் பிராந்தியத்துக்கு வேறு எந்த வழியும் இல்லை என சீனா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யீ கூறுகையில், 'தாய்வானுக்கு சுதந்திரம் கேட்கும் சக்திகளை அமெரிக்கா ஊக்குவித்து வருகிறது. இதன் காரணமாக தாய்வானை அமெரிக்கா ஆபத்தான நிலைக்குக் கொண்டு செல்கிறது.

இத்தகைய நடவடிக்கைகள் அமெரிக்காவுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். தாய்வான் தொடர்பான அமெரிக்காவின் செயல்களுக்காக, அந்த நாடு தாங்க முடியாத விலை கொடுக்க வேண்டியிருக்கும்.

சீனத் தாயகத்துடன் மீண்டும் இணைவதைத் தவிர தாய்வான் பிராந்தியத்துக்கு வேறு எந்த வழியும் இல்லை' என கூறினார்.

சீனாவில் கடந்த 1949இல் நடந்த உள்நாட்டுப்போருக்கு பிறகு தாய்வான் தனிநாடாக உருவானது. ஆனாலும் தாய்வான், சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி என சீன அரசாங்கம் கூறி வருகிறது

எனினும் தாய்வான், சீனாவின் கட்டுப்பாட்டில் இல்லை. ஜனநாயக முறையிலான அரசாங்கம் தான் அங்கு ஆட்சி அதிகாரத்தில் உள்ளது.



ஆனால், தேவை ஏற்பட்டால் சீனக் கடற்கரையில் இருந்து சுமார் 200 கி.மீ. தொலைவில் உள்ள தாய்வானைக் கைப்பற்ற படை பலத்தை பயன்படுத்தவும் தயங்க மாட்டோம் என சீனா மிரட்டியும் வருகிறது.

இந்த சூழலில் கடந்த 72 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சீனா-தாய்வான் இடையிலான இராணுவ பதற்றம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதனிடையே, எதிர்வரும் 2025ஆம் ஆண்டுக்குள் தங்கள் நாட்டை சீனா ஆக்கிரமிக்கக் கூடும் என்று தாய்வான் பாதுகாப்புத் துறை அமைச்சர் சியு குவோ-செங்கும் அச்சம் தெரிவித்துள்ளார்.

# ஒமிக்ரோனைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு தாருங்கள் தமிழக முதல்வர் காணொலி மூலம் வேண்டுகோள்




தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி பதிவின் மூலம் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்து செய்தியை வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், இந்த 2022 ஆம் ஆண்டு மிகவும் நன்றாக இருக்க வேண்டும்என்பதுதான்எல்லோருடைய எதிர்ப்பார்ப்பு, நம்பிக்கை. அப்படி நன்றாக இருக்க வேண்டும் என்றால் கடந்த ஆண்டுகள் தந்த பாடங்களை நாம் மறந்துவிடக்கூடாது.

கொரோனா என்ற நோய் தொற்றின் முதலாவது அலை மற்றும் இரண்டாவது அலையில் இருந்து நாம் மீண்டு வந்திருக்கிறோம். குறிப்பாகச் சொல்ல வேண் டும் என்றால், இரண்டாவது அலை உச்சக்கட்டத்தில் இருந்த போது தான் உங்களுடைய முதலமைச்சராக மட்டுமல்ல, உங்களுடைய நலனுக்கும் நான் பொறுப்பேற்றுக் கொண்டேன்.

இரண்டாவது அலையைக் கட்டுப்ப டுத்துவதுதான் என்னு டைய முதல் வேலையாக இருந்தது. என்னுடன் நம் அமைச்சர் பெருமக்கள், மருத்துவம் மற் றும் மக்கள் நல்வாழ்வுத் துறையினர், உள்ளாட்சி நிர்வாகத்தினர், பொலிஸ் துறையினர், தூய்மை பணியா ளர்கள் என்று பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் இணைந்து நின்று செயற்பட்டார்கள். அதை மறக்கவே முடியாது. அதனால், குறைந்த கால அளவிலேயே இரண்டாவது அலையை கட்டுப்படுத்தினோம். அதற்குப் பொது மக்களாகிய உங்களுடைய ஒத்துழைப்பும் முக்கிய காரணமாக இருந்தது.

தடுப்பூசி முகாம்களைத் தொடர்ந்து நடத்தியபோது அறிவியல்மீதுநம்பிக்கை வைத்து ஆர்வத்துடன் வந்து ஊசி போட்டுக்கொண்டீர்கள். உங்களுடைய ஆர்வம் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அதனால், தடுப்பூசி போட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. கொரோனா பரவலையும் இறப்பு எண்ணிக்கையையும் பெருமளவில் கட்டுப்படுத்த முடிந்தது. அதே மாதிரியான ஒரு ஒத்துழைப்பைத்தான் இந்த புத்தாண்டிலும் உங்களிடம் மறுபடியும் நான் எதிர்பார்க்கிறேன்.

கொரோனாத் தொற்று பல உருமாற்றங்களை அடைந்திருக்கிறது. இப்போது ஒமிக்ரோன் என்ற பெயரில் அது உலகம் முழுவதும் பரவிக்கொண்டி ருக்கிறது. அதனுடைய வேகம் அதிகரித்து இருக்கிறது. அதனால், நாம் இன்னும் கொஞ்சம்கவனமாக இருக்க வேண்டும். ஒமிக்ரோன் பரவலை கட்டுப்படுத்த என் தலைமையில் இருக் கக்கூடிய உங்கள் அரசு தேவையான எல்லா நடவடிக்கைளையும் எடுத்து வருகிறது.

வெளிநாடுகளில் இருந்தும், பிற மாநிலங்களில் இருந்தும் வருபவர்களுக்கான பரிசோதனை, நம் மாநிலத்தில் அறிகுறி தெரிந்தால் அதற்கான பரிசோதனை, சிகிச்சைக்கான ஒக்சிஜன், படுக்கை, மருந்து அனைத்தும் போதுமான அளவில் இருக்கின்றன. கூடுதல் தேவையை யோசித்தும் அதற்கேற்றவாறு முழுமையான ஏற்பாடுகளைச் செய்திக்கிறோம். அதனால் நீங்கள் யாரும் பயப்படத்தேவை இல்லை. உங்கள்ஒத்துழைப்புதான்எங்களுக்குத் தேவைப்படுகிறது.

ஒமிக்ரோன் பரவலைத் தடுக்க சில கட்டுப்பாடுகளை அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. அது உங்கள் பாதுகாப்பிற்காகத்தான். அந்த கட்டுப்பாடுகளை கடைப்பிடியுங்கள். கொரோனா காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய பழக்கங்களைகட்டாயமாகநீங்கள்கைக்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொரு வருடைய உடல் நலனும் உங்களுடைய முதலமைச்சரான எனக்கு மிகவும் முக்கியம். அதற்காகத்தான் சில கட்டுப் பாடு கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு தமிழ்நாட்டு மக்களான நீங்கள் நிச்சயமாக ஒத்துழைப்புத் தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அரசு அறிவித்திருக்கிற வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும் என்று உங்களுடைய முதலமைச்சராக மட்டுமல்ல, உங்களுடைய அன்புச் சகோதரனாகவும், உங்களில் ஒருவனாகவும் மிகுந்த பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன், என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்திருக்கிறார்.

## இந்தியா அனுப்பிய 5 லட்சம் டோஸ் தடுப்பூசி ஆப்கானிஸ்தான் தலைநகர் சென்றடைந்தது




இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் கொரோனா தடுப்பூசி மருந்துகளை இந்தியா நல்லெண்ண அடிப்படையில் அண்டை நாடுகள் மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய நிலையில் உள்ள நாடுகளுக்குவழங்கிவருகிறது.

இதன்படி பூட்டான், மாலைதீவுகள், நேபாளம், பங்களாதேஷ், மியான்மர், மொரீசியஸ், சீஸெல்ஸ், இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு இலவசமாக தடுப்பு மருந்தை அனுப்பி வைத்து வருகிறது.

இதற்கிடையே, இந்தியா நல்லெண்ண அடிப்படையில் ஆப்கானிஸ்தான் நாட்டுக்கு ஒரு மில்லியன் டோஸ் கோவாக்சின் தடுப்பூசியை அனுப்பி வைத்துள்ளதாக வெளியுறவுத்துறை அறிவித்திருந்தது. இன்று முதல் தவணையாக 5 லட்சம் டோஸ் கோவாக்சின் தடுப்பூசி மருந்து அனுப்பிவைக்கப்பட்டதாகவும், ஈரானின் மஹான் விமானத்தில் அனுப்பி வைக்கப்பட்ட மருந்து காபூல் நகரைச் சென்றடைந்துவிட்டதாகவும் இந்திய அரசுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த தவணையான மேலும் 5 லட்சம் தடுப் பூசி கள் ஜனவரி இரண்டாவது வாரத்தில் அனுப்பி வைக்கப்படும் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளது.



## விவசாயிகளுக்கு பிரதமர் மோடி நிதியுதவி பத்தாவது தவணையை இன்று வழங்கினார்

பிரதமர் உழவர் கௌரவ நிதி என்ற திட்டத்தை இந்திய மத்திய அரசு கடந்த 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் அமுல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், தகுதி வாய்ந்த விவசாயிகளுக்கு மூன்று தவணைகளாக தலா இரண்டாயிரம் ரூபா வீதம் ஆண்டுக்கு 6ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

இந்தப் பணம் அவர்களது வங்கிக் கணக்குகளில் நேரடியாக செலுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் ஏறத்தாழ 11கோடியே 60 லட்சம் விவசாயிகள் பலன் அடைகிறார்கள்.

இந்தத் திட்டத்தின் பத்தாவது தவணையை அவர்களின் வங்கிக்கணக்குகளில் இந்தியப் பிரதமர் மோடி இன்று நேரடியாக செலுத்தியுள்ளார் என வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தெரிவித்துள்ளார்.



## கூட்ட நெரிசலில் சிக்கி 12 பேர் பலி காஷ்மீர் கோயிலில் நடந்த சோகம்

ஜம்மு காஷ்மீரின் கத்ரா நகரில் மைந்துள்ள மாதா வைஷ்ணவ தேவி கோயிலில் நேற்று நள்ளிரவில் புத்தாண்டுக் கொண்டாட்டங்களை முன்னிட்டு அப்பகுதி மக்கள் அதிக அளவில் கூடியபோது கூட்ட நெரிசல் ஏற்பட்டுள்ளது. இந்த நெரிசலில் சிக்கி பொதுமக்களில் 12பேர் உயிரிழந்தனர் என்றும் 20இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இந்த நிலையில், காஷ்மீரில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோர் குடும்பத்துக்கு இரங்கல் தெரிவித்துள்ள இந்தியப் பிரதமர் மோடி, நிவாரணமாக அவர்களுடைய குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்படும் என அறிவித்துள்ளார். மாநில அரசின் சார்பில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா 10 லட்சம் ரூபா நிவாரணமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# செங்கலடி பிரதேச சபையில் அமைதியின்மை



மட்டக்களப்பு – ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச சபையின் விசேட அமர்வு நேற்று காலை சபையின் தலைவர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் செங்கலடி பிரதேச சபையின் தவிசாளர் சி.சர்வானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர் வனேந்திரன் சுரேந்திரனால் வழங்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக குறித்த விசேட அமர்வு ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தது.

அவரின் பிரேரணைகளாக (செங்கலடி பிரதேச வைத்தியசாலையின் பிரேத அறைக்கு செல்லும் வீதிக்கு கிரவல் இடல் மற்றும் செங்கலடி மத்திய கல்லூரி முன்னும் பாடசாலை வளாகப்பகுதயிலும் வாகணங்கள் நிறுத்துவதை தடை செய்ய கோரியும்) எனினும் இன்றய சபை அமர்வில் குறித்த பிரேரணையை தொடரபில் விசேட கூட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்துத் உறுப்பினர் வனேந்திரன் சுரேந்திரன் கலந்துகொண்டிருக்கவில்லை.

இதன் காரணமாக குறித்த பிரேரணைகள் தொடர்பாக சபையில் ஆராயப்படவில்லை. இதேவேளை நேற்றைய அமர்வில் உரையாற்றிய பிரதேச சபையின் தவிசாளர் சி.சர்வாணந்தன் கருத்து தெரிவிக்கையில். எனது புகைப்படத்தை முகப்புத்தகத்தில் பதிவேற்றி உறுப்பினர் ஒருவர் இங்குளார் அவர் நான் சபைக்கு தவிசாளராக வந்த பின் என்னை இவ்வாறு முகப்புத்தகங்களுடாக இழிவு படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றார். இவர் இவ்வாறு செயற்படுவதால் இவருக்கு எதிராக ஒரு மாத காலம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளேன். இதற்கு சபையின் அனுமதி கேட்கின்றேன் எனவும் சபையில் தெரிவித்தார்.

குறிப்பாக முகப்புத்தகத்தில் பதிவிட்டதையும் பனர் பிரன்ட் மூலம் சபையில் காட்சிப்படுத்தியிருந்தார். இது தொடர்பாக தவிசாளர் உறுப்பினர்களிடம் தெரிவித்த போது இது தனி ஒருவர் சார்ந்து இருப்பதால் சபை உறுப்பினர்கள் இது தொடர்பாகக் கருத்து தெரிவிக் முடியாது என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் உறுப்பினர் ந.மோகராஜன், தமிழ் தேசிய கூட்டமைப்பின் செங்கலடி பிரதேச சபையின் உப தவிசாளர் கா.இராமச்சந்திரன், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் உறுப்பினர். ந.திருணாவுக்கரசு ஆகியோர் சபையில் உரையாற்றினர்.

இதே வேளை தவிசாளரின் அனுமதி இல்லாமல் தொலைபேசி உரையாடச் செல்ல முயன்றார் எனத் தெரிவித்து புத்திசிகாமணி சசிகரனை சபையில் இருந்து வெளியேற்றுமாறு தவிசாளர் தெரிவித்தார்.

இதன் போது தெரிவித்த தவிசாளர் 'குண்டர்களே இவரை வெளியேற்றுங்கள்'.. 'குண்டர்களே இவரை வெளியேற்றுங்கள்'. எனத் தெரிவித்தவாறு குறித்த உறுப்பினரை ஒரு மதாகாலம் சபை நடவடிக்கையில் கலந்து கொள்ளாது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்து. இத்துடன் சபை கலைகின்றது என வெளியேறினார். தவிசாளர் வெளியேறியதன் பின் உறுப்பினர்களுக் கிடையே தவிசாளரின் வெளியேற்றம் தொடர்பில் சிறு அமைதியின்மை ஏற்பட்டது.

# பொருளாதார மேம்பாட்டிற்காக ரூ. எட்டரைக் கோடி ஒதுக்கீடு

எதிர்வரும் 2022 ஆம் ஆண்டில் வறிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மாத்திரம் 8 கோடியே 50 லட்சம் ரூபா நிதி எமது அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் தெரிவித்துள்ளார்.



சுபீட்சத்தின் பால் நாட்டை கட்டியெளுப்பும் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி மற்றும் மனைசார் கால்நடை வளர்ப்பு, சிறு பொருளாதாரப் பயிர்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறுபட்ட வாழ்வாதார உதவி திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டம் பூராகவும் வழங்கப்பட்டுவரும் நிலையில் மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மக்களுக்கான பல்வேறுபட்ட உதவித்திட்டங்களை வழங்கும் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் பிரதம விருந்தினராக பங்கேற்றிருந்தது டன், உதவித்திட்டங்களையும் வழங்கி வைத்துள்ளார்.



# சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

ஓட்டமாவடி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எம்.ஐ.அஸீஸ்;, மட்டக்களப்பு மத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.யூ.எம்.இஸ்மயில், மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்கள உத்தியோகத்தர் திருமதி.கோகிலா சிவானந்தன், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அதிகாரி, பாடசாலை ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது இளைஞர் விவகார விளையாட்டு அமைச்சின் மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் ஏற்பாட்டில் தொழில் வழிகாட்டல் வாரத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட கட்டுரை, பேச்சு, கவிதை, வினாடிவிடை போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடம் மற்றும் பங்குபற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.



# மட்டக்களப்பு வாவியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு வாவியிருந்து ஆண் ஒருவரின் சடலம் வெள்ளிக்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி பகுதியில் அமைந்துள்ள மட்டக்களப்பு வாவியில் தோணி ஒன்றில் இருவர் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது தோணி கவிழ்ந்து ஆற்றினுள் இருவரும், வீழ்ந்துள்ளனர். அதில் ஒருவர் தெய்வாதீனமாக உயிர் பிழைத்துள்ளார்.

எனினும் மற்றைய நபர் ஆற்றில் காணாமல் போயுள்ளார். பின்னர் அப்பகுதி மக்கள் இணைத்து ஆற்றினுள் தேடிய நிலையில் காணாமல் போனவர் சடலமாக மீட்க்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் களுவாஞ்சிகுடி நாவலடி வீதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான வீதிமென் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிவான் நீதிமன்ற நீதிபதி கே.ஜீவராணியின் உத்தரவுக்கமைய சடலத்தைப் பார்வையிட்ட களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம், சடலத்தை பி.சி.ஆர் பரிசோதனைக்குட்படுத்தி, பிரேத பரிசோதனைக்குட்படுத்தும்படி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இந்நிலையில் களுவாஞ்சிகுடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# ஆசிய ஜூனியர் கிரிக்கெட் தொடர் சம்பியனானது இந்திய அணி!

19 வயதுக்குட்பட்டோருக்கான ஜூனியர் ஆசிய கிரிக்கெட் கிண்ணத் தொடரில் இலங்கையை வீழ்த்திய இந்திய அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

துபாயில் நேற்று நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆட்டத்தின் இடையில் மழை குறுக்கிட்டதால் போட்டி இடை நிறுத்தப்பட்டு மீண்டும் ஆரம்பமானபோது அணிக்கு 38 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது.

இலங்கை கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 38 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 106 ஓட்டங்களையே பெற்றது. யசிரு ரொட்றிகோ ஆட்டமிழக்காது 19 ஓட்டங்களையும் ரவீன் டி சில்வா 15 ஓட்டங்களையும் எடுத்தனர். இந்திய அணியின் விக்கி ஒஸ்ட்வால் 3 விக்கெட்டுகளையும் கௌசல் தம்பே 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 106 என்ற வெற்றி இலக்கை நோக்கி இந்திய அணி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய போதும் மீண்டும் மழை குறுக்கிட்டது. அதனையடுத்து, போட்டி 32 ஓவர்களுக்கு குறைக்கப்பட்டு, 102 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டன. அந்த வெற்றியிலக்கை 21.3 ஓவர்களில் ஒரேயொரு விக்கெட்டை மட்டும் இழந்து அடைந்த இந்திய அணி, 9 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தையும் கைப்பற்றியது.

இந்திய அணியின் அங்கிரிஷ் ரகுவன்ஷி ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களையும் கே ரஷீட் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களையும் எடுத்தனர். இலங்கை அணியின் யசிரு ரொட்றிகோ வீழ்த்தப்பட்ட ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தார்.



## பங்களாதேஷ் அணியுடனான முதலாவது டெஸ்ட் நியூஸிலாந்தின் டெவொன் கொன்வே சதமடித்தார்

நியூஸிலாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகியது.

நியூஸிலாந்தின்மவுண்ட்மவுங்கனுய் மைதானத்தில் இன்று ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்டுக் களமிறங்கிய நியூஸிலாந்து அணி, இன்றைய ஆட்டநேர முடிவில், 5 விக்கெட்டுகளை இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

டெவோன் கோன்வே 122 ஓட்டங்களுடனும்,வில்யங்52ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க, ஹென்றி நிக்கோல்ஸ் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்திலிருந்தார். பங்களாதேஷ் அணியின் சொரிபுல் இஸ்லாம் 2 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நாளை தொடரவுள்ளது.

## இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியின் தலைவராக கே.எல்.ராகுல் அறிவிப்பு



தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி தற்போது டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது. இப்போட்டிகள் முடிவடைந்ததும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கவுள்ளது.

இந்த ஒருநாள் தொடருக்கான இந்திய அணியின் தலைவராக ரோகித் சர்மா நியமிக்கப்பட்டிருந்தபோதும், காயம் காரணமாக அவரால் தொடரில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியின் தலைவராக கே.எல். ராகுலுக்கும், துணைத் தலை வராக பும்ராவுக்கும் வாய்ப்பு வழுங்கப் பட்டுள்ளது.

இதேபோன்று ஐ.பி.எல். மற்றும் உள்நாட்டுப் போட்டிகளில் சிறப்பாக விளையாடிய ருதுராஜ் கெய்க்வாட் மற்றும் வெங்கடேஷ் அய்யர் ஆகியோரும் அணியில் இணைக்கப்பட்டுள்ளனர்.

ஐ.பி.எல். 2021 சீசனில் சென்னை அணிக்காக விளையாடி 635 ஓட்டங்கள் குவித்த ருதுராஜ், இந்தியாவின் உள்நாட்டுத் தொடரான விஜய் ஹசாரே தொடரின் 5 போட்டிகளில் 4 சதம் உள்பட 603 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

ஐ.பி.எல். 2021 சீசனின் இரண்டாம் பகுதியின்போது வெங்கடேஷ் அய்யர் அபாரமாக விளையாடிக் கவனம் ஈர்த்திருந்தார். விஜய் ஹசாரே தொடரில் மத்தியப் பிரதேச அணிக்காக 379 ஓட்டங்களை எடுத்ததோடு 6 போட்டிகளில் 9 விக்கெட்களையும் வீழ்த்தியிருக்கிறார்.

முன்னாள் அணித்தலைவர் விராட் கோலி, விக்கெட் காப்பாளர் ரிப் பண்ட், ஜஸ்பிரித் பும்ரா ஆகியோர் 9 மாதங்களுக்குப் பின்னரும் ரவிச்சந்திரன் அஷ்வின் 2017 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் ஒருநாள் போட்டிக்கான அணிக்குத் திரும்பியுள்ளனர். இலங்கைத் தொடருக் குப் பின்னர் அணியில் இணைக்கப்படாதிருந்த ஷிகர் தவானுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒருநாள் போட்டிக்கான அணி விவரம்: கே.எல்.ராகுல் (கப்டன்), ஷிகர் தவான், ருதுராஜ் கெய்க்வாட், விராட் கோலி, சூர்ய குமார் யாதவ், ஷ்ரேயாஸ் அய்யர், வெங்கடேஷ் அய்யர், ரிப் பண்ட், இான் கின், சாஹல், அஷ்வின், வாஷிங்டன் சுந்தர், ஜஸ்பிரித் பும்ரா, புவனேஷ்வர் குமார், தீபக் சாஹர், பிரசித் கிருஷ்ணா, ஷர்துல் தாக்கூர், மொஹமட் சிராஜ்.

## ஆஸ்திரேலிய வீரர் ட்ராவிஸ் ஹெட்டுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது

இங்கிலாந்து கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ஆஸி டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. 3 டெஸ்ட் போட்டிகள் முடிவடைந்துள்ள நிலையில் இந்த டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலியா 3:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இரு அணிகளும் இடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி வரும் 5 ஆம் திகதி சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. இந்த நிலையில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் ட்ராவிஸ் ஹெட்டுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தனது டுவிட்டர் பக்கத்தில் தகவல் வெளியிட்டுள்ளது.



ட்ராவிஸ் ஹெட்டுக்கு கொரோனாப் பரிசோதனை முடிவில் தொற்று உறுதியாகியுள்ளது. அவருக்கு கொரோனா அறிகுறிகள் எதுவும் இல்லை. அவர் அடுத்த 7 நாள்களுக்கு மெல்போர்னில் தன்னைத் தனிமைப்படுத்திக்கொள்வார். ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் அனைத்து வீரர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் கொரோனாப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ட்ராவிஸ் ஹெட் விரைவில் குணமடைந்து ஐந்தாவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவர் என எதிர்பார்க்கிறோம், என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் டுவீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நத்தார் பரிசு எரிபொருள் விலை ஏற்றம்; புத்தாண்டு பரிசு பால்மா விலை எகிறல்!

## கடுமையாகச் சாடுகிறார் சஜித்



புத்தாண்டுக்கு முன்னர் பால்மாவின் விலையை அதிகரித்து மக்களுக்குப் புத்தாண்டுப் பரிசுகளை அரசாங்கம் வழங்கியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மலையளவுக்கு வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் வாக்களித்த 69 லட்சம் மக்கள் உட்பட ஒட்டுமொத்த மக்களையும் ஆபத்தில் ஆழ்த்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்–

நத்தாருக்கு முன் எரிபொருளின் விலையை அதிகரித்து நத்தார் பரிசுகளை வழங்கிய அரசாங்கம், புத்தாண்டுக்கு முன்னர் பால்மாவின் விலையையும் அதிகரித்து மக்களுக்கு புத்தாண்டுப் பரிசுகளை வழங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஒரு நவீனத்துவ, மனிதாபிமான, புதிய அரசியல் இயக்கம் என்றும் திறமையான இளைஞர்களைக் கொண்டு பாதாளத்தில் வீழ்ந்துள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவோம் என நம்புபுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு தகன சாலைகளிலும் தாக்கம்!

நாட்டில் நிலவி வரும் எரிவாயு தட்டுப்பாட்டு நிலைமை தகனசாலைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

எரிவாயு தட்டுப்பாடு காரணமான கொவிட் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்களை எரிக்க முடியாத நிலை சில இடங்களில் உருவாகியுள்ளது.

எரிவாயு தட்டுப்பாட்டால் உயிரிழந்தவர்களின் சடலங்களை பிணவறைகளில் தொடர்ந்தும் வைத்திருக்க நேரிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஹற்றன், பொகவந்தலாவ, மஸ்கெலியா ஆகிய பகுதிகளில் கொவிட் தொற்று காரணமாக கடந்த 30 ஆம் திகதி 7 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த சடலங்கள் தொடர்பில் பிரேத பரிசோதனை நடத்தப்பட்ட போதிலும் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக சடலங்களை எரிப்பதற்கு முடியாத நிலையால் உறவினர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நோர்வூட், கொட்டகலை மற்றும் தலவாக்கலை தகனசாலைகளில் இந்த நிலைமை காணப்படுவதாகவும், இதனால் கூடுதல் பணத்தை செலுத்தில் நுவரெலியா தகனசாலையில் சடலங்களை எரிக்க நேரிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சீமெந்தின் விலை மீண்டும் அதிகரிப்பு

சீமெந்து பொதியின் விலையை இன்று (சனிக்கிழமை) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரித்ததாக உள்நாட்டு சீமெந்து நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

அதன்படி 50 கிலோ சீமெந்து பொதியொன்றின் விலையை 100 ரூபாவால் அதிகரிக்கத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி சீமெந்து பொதியொன்றின் புதிய விலை 1,375 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# 18 வயது பூர்த்தியான உடன் வாக்களிக்க விசேட ஏற்பாடு!

*18 வயது பூர்த்தியான உடன் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பிலான அறிவிப்பினை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.*

*18 வயதைப் பூர்த்தி செய்வோரின் பெயர்கள் பிரதான தேர்தல் இடாப்பில் பதிவு செய்யப்படுவதற்கு முன்னதாகத் தற்காலிக அடிப்படையில் பதிவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இவ்வாறு பதிவு செய்வதன் மூலம் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான சட்ட அங்கீகாரம் வழங்கப்படுகின்றது.*

*இதன்படி, 2003.06.01 முதல் 2004.01.31 வரையில் பிறந்தவர்கள் தேர்தல் இடாப்பில் தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறு கோர முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.*



# பிரதான வீதியை வழிமறித்து திருமலையில் தடம்புரண்ட ரயில்!

கோதுமை மாவை ஏற்றிச் சென்ற ரயில் ஒன்று தடம் புரண்டுள்ளது.


திருகோணமலையில் இருந்து சீதுவை நோக்கி கோதுமை மாவை ஏற்றிச் சென்ற ரயில், திருகோணமலை நோக்கி திரும்பிக் கொண்டிருந்த போது, கலாவெள ரயில் நிலையத்திற்கு அருகில் தடம் புரண்டுள்ளது. ரயில் கடவை ஒன்றில் ரயில் தடம் புரண்டதன் காரணமாக கல்நேவ – விஜிதபுர வீதியின் வாகன போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. இந்த விபத்தில் ரயில் தண்டவாளம் பலத்த சேதமடைந்துள்ளதாகத் தெரிவித்தார். தண்டவாளத்தை சீரமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

# பூநகரி பிரதேச சபையின் புதிய தவிசாளர் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்!

பூநகரி பிரதேச சபையின் புதிய தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் முழங்காவில் தேசிய பாடசாலையின் பிரதி அதிபருமான சிறீரஞ்சன் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) புதிய தவிசாளரை செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் வரவேற்றனர்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உபதவிசாளர் கயன், பூநகரி பிரதேச சபையின் உபதவிசாளர் எமிலியாம்பிள்ளை, தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி கிளையின் செயலாளர் விஜயன், பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டாளர்கள், சபையின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# இலங்கைக்கு இந்தியா கடன் கொடுக்கவேண்டும்

## சுப்பிரமணிய சுவாமி வலியுறுத்து



இலங்கைக்கு இந்தியா ஆயிரம் கோடி டொலர் கடன்களை வழங்க வேண்டும் என பாரதீய ஜனதா கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதியும் இந்திய மாநிலங்களவை உறுப்பினருமான சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ருவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், இதன் மூலம் சீனாவிற்கு ஒரு சகா கிடைப்பதை தடுக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரத்தில் இந்தியா தனக்கு நீண்ட கால சகா ஒருவர் தேவை எனக் கருதினால் இந்தியா தற்போது ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்களை (ஒத்திவைக்கப்பட்ட வட்டி) கடனாக வழங்கவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், அல்லது சீனாவிற்கு இளைய சகா ஒருவர் கிடைக்கும் நிலையை எதிர்கொள்ளவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி அரசாங்கம் பல வெளிவிவகாரக் கொள்கைகளில் தோல்வியடைந்துள்ளது. இலங்கை இன்னொன்றாக இருக்கவேண்டாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.01.2022இல் வெளியிடப்பெற்றது.